எங்கள் பிணைப்பு உறுதியாக உள்ளது!

எங்கள் கூட்டணி வலுவடைகிறது!

மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி சந்திப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, ஏப்.21-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி தன்னைச் சந்தித்தது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள தமது சமூக வலைதளப் பதிவில் "எங்கள் பிணைப்பு உறுதியாக உள்ளது. எங்கள் கூட்டணி வலுவடைகிறது" என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள தமது சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது :

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ.பேபி, என்னை சந்தித்து, இரண்டு முக்கிய முன்னேற்றங்களுக்கு தமிழ்நாட்டை வாழ்த்தினார் - ஆளுநர் அலுவலகத்தின் வரம்புகளை அம்பலப்படுத்திய உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுத் தீர்ப்பு மற்றும் மாநில சுயாட்சிக்கான உயர் மட்டக் குழுவை அமைத்தல். இவை தனிப்பட்ட வெற்றிகள் அல்ல.

மதுரையில் நடந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் நாங்கள் கூட்டாகப் போராடிய கூட்டாட்சி இலட்சியங்களின் உயிருள்ள வெளிப்பாடு அவை - அரசியலமைப்பு மேலோங்கும் ஒரு தொலைநோக்குப் பார்வை, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களின் விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரத்தால் தடுக்க முடியாது.

எங்கள் பிணைப்பு உறுதியாக உள்ளது, எங்கள் கூட்டணி வலுவடைகிறது!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.முரளியின் மைத்துனர் பாலாஜியின் மகன் திருமண வரவேற்பு விழாவில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதி துணை செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பி.செந்தில்குமார், ஜெ.ஹரிக்குமார், சி.காந்தி, ஆர்.பி.ரமேஷ் உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டு வாழ்த்தினர்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! சு.மனோகர் தலைமையில்

78வது வட்ட தி.மு.க. சார்பில் 'மக்கள் முதல்வரின் மனிதநேய விழா!' மாபெரும் புகழரங்கம்!

அமைச்சர் ஐ.பெரியசாமி - நக்கீரன் கோபால் - குபேந்திரன் - பிரியன் - லட்சுமி சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை ஏப்:21

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி, 78வது வட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 61 ஏடுகாக்கப் பிறந்த சோழன்! நாடு காக்க வாழும் தோழன்! மாபெரும் புகழ் அரங்கம் நாளை (22.4.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 6:00 மணி அளவில் லட்சுமி மஹால் மாணிக்கம் தெரு புரசைவாக்கத்தில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் புகழரங்கத்திற்கு 78வது வட்டக் கழக செயலாளர் சு. மனோகர் தலைமை ஏற்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் பி.கே. சேகர்பாபு,தயாநிதி மாறன் எம்.பி. சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா,எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு, எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர், மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன்,கோ.மணி,புரசை ஜி. தாமோதரன்,பரிதி இளம் சுருதி, ராஜேஸ்வரி ஸ்ரீதர், க.நந்தீஸ்வரன், அ.நிர்மலாதேவி, எல்.சுந்தர்ராஜன், க.வினோத், கே.கோகுல், எம்.தில்லை குமார், பி.சி.சம்பத் குமார், ஜே.கே.கருணாகரன், கே.வள்ளி,சூளை சுப்புராயலு,தி. தயாளன்,வி.அபாய், ஆர். எம். ரங்கநாதன், சி.சேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.ஹரிபாபு, மு.கிருஷ்ணமூர்த்தி, வே.சம்பத்,உஷா ஜெகதீசன்,த.பொற்செழியன், ப.கருணாநிதி,எஸ். தனசேகர்,க. ஜெகதீசன்,வி.முரளி ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

புகழரங்கத்தை கழக துணை பொதுச்செயலாளர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமி துவக்கி வைக்கிறார்.

விழாவில் மூத்த பத்திரிகையாளர் நக்கீரன் கோபால், பத்திரிகையாளர் குபேந்திரன், பத்திரிகையாளர் பிரியன், பத்திரிகையாளர் லட்சுமி சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் இ.பரந்தாமன் எம்.எல்ஏ, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ,அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, எழும்பூர் தொகுதி பார்வையாளர் பி.எம். யாழினி,ப. ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், எஸ்.மணிமுடி,தமிழன் பிரசன்னா,வே. உமகாந்த் உள்ளிட்ட மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பங்கேற்கின்றனர்.

வட்டக் கழக செயலாளர் ந.பாலு நன்றி கூறுகிறார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

அன்னம் தரும் அமுதக் கரம் 60வது நாள்!

அம்பத்தூர் கிழக்குப் பகுதியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. - கழகத்தினர் உணவு வழங்கினர்!

சென்னை, ஏப். 21 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 60 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு (20.4.2025) அன்று அம்பத்தூர் வடக்கு பகுதி 1) 79அ வட்டம் - ராம்நகர், ரெட்டில்ஸ் ரோடு, ராக்கி திரையரங்கம் அருகில், சென்னை 2) 79 அ வட்டம் வெங்கடேஸ்வரா நகர், ஏரிக்கரை சாலை வாட்டர் டேக்ஸ் அருகில் சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி.எம்.சி, எம்.டி..ஆர்.நாகராஜ், டி.எஸ்.பி.ராஜ கோபால் எம்.சி ஆகியோர் "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமை களுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜய குமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா (எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன்,

த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி..பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கி ணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே. ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம. அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.